அம்மசோதா காலங்கடந்ததாகிவிட்டது. அம்மசோதாவை மீண்டும் கொண்டு வருவதற்காக, புதிதாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

(இ) 1946-ம் ஆண்டிலிருந்து இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 1946-ம் ஆண்டிலிருந்து இதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் 1960-ஆம் ஆண்டிலே இந்த முயற்சி எடுக்கப்பட்டு அதற்காக கமிட்டி அமைக்கப்பட்டு பிறகு 1961-ஆம் ஆண்டிலே தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலே அதை அடுத்த அரசாங்கம் வந்து கவனித்துக்கொள்ளட்டும் என்று பிறகு விட்டுவிட்டார்கள். இப்படியே அது ஒவ்வொரு முறையும் விடப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக இப்படியே இருந்து வருகிறது. ஆகவே இனியாகிலும் தாமதப்படுத்தாமல் எத்தனை வருட காலத்திற்குள் இதைக் கொண்டுவருவதாக உத்தேசம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு இப்பொழுது முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவாகவே சட்டத்தை அமல் படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the rich experience gained by working out the various Acts, we have found out many defects in these Acts. So will the Government take steps to repeal all the existing Acts and then formulate a new comprehensive Act instead, for different subjects relating to Panchayat Unions, Municipalities including Corporation?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒரு காலத்திலே நல்லது என்று எடுத்துக்கொள்ளப்படுவது காலப் போக்கிலே பயன்படத்தக்கதாக இல்லையென்ற நிலை இருப்பதாலே முழுமையாக நீக்கப்பட்டாலும், அதற்கு மறுபடியும் சிலபல திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டியிருக்கும். ஆகவே நல்ல அம்சங்களை எடுத்துக் கொண்டு புதிதாக தேவைக்கேற்ப நல்ல அம்சங்களைச் சேர்த்து ஒரு நல்ல சட்டத்தை மேற்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

* 264 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU R. R. MUNISWAMY : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the Local Bodies Acts (Panchayats Act, Panchayat Union Act, Municipalities Act, Corporation Act) to confer more powers on local bodies; and

(b) if so when and how.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியப்புகளுக்கும் அதிக அதிகாரம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச்

1967 ஜூலை 11]

சட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது எதுவும் இல்லை.

தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்துசெய்து அதற்கு மாறாகப் புதிய சட்டம் இயற்றவும், 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்யவும் செயற்குறிப்பு உள்ளது. பொதுமக்களின் விருப்பத்திற்கேற்பவும், இச்சட்டங்கள் செயல்படும்போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நீக்குவதற்காகவும் இவ்வாறு செய்யக் கருதப் பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: பஞ்சாயத்துக்குப் போதிய அதிகாரம் இல்லாத காரணத்தால் பஞ்சாயத்தில் உள்ள தலைவர்களைப் பார்த்து பொதுமக்கள் குடிதண்ணீர் வசதி, ரோடு வசதி இல்லை யென்று கூறும்போது 'நாங்கள் என்ன செய்வது? எங்களுக்கு அதிகாரம் இல்லை, 30 ரூபாய்க்கு மேல் செக் கிழிக்க முடியாது' என்று கூறுகிறார்கள். இந்த நிலையை மாற்றி பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரம் கொடுக்க வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 30 ரூபாய்க்கு மேல் செக் போட அதிகாரம் இல்லையென்ற பெரும் குறையைச் சொல்லுகின்ற அதே நேரத்தில் அந்தப் பதவிக்கு 30,000 ரூபாய் செலவு செய்கின்ற தலைவர்களும் நாட்டில் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தேவையான மாறுதல்களை தேவையான நேரத்தில் செய்வதற்கு அரசாங்கம் தயங்காது.

THIRU K. VINAYAKAM: Has the Government got any scheme to revive the defunct taluk boards and district boards?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்கனவே இருந்த ஜில்லா போர்டு அதிகாரம் கூட இப்போது கிடையாது. ஆகவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் சரியான முறையில் இயங்க முடியாமல், பொதுமக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் இருக்கின்றன. அதை உத்தேசித்து பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தனிக் கேள்வி வேண்டும்.

THIRU K. VINAYAKAM: When this Government decide upon reorganising the Local Boards Acts, will they think of the possibility of providing for the election of the presidents of panchayat boards, Chairman of panchayat union councils and the Mayor of the Madras Corporation directly by the people instead of the elected members electing them which involves a lot of financial commitment for the luminary that gets elected?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றி தேவையான போது ஆராயப்படும்.

பத்திரப்பதிவு முறை

* 265 வினு—**திரு. வி. கோதண்டராமன்:**
திரு. கே. விநயகம்: } மதிப்பிற்குரிய

சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யும் முறைகளில் 1—4—1967 முதல் என்னென்ன விதமான மாறுதல்கள் கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1—4—1967 முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் புதிய பத்திரப்பதிவு முறையின்படி, பத்திரப்பதிவு அலுவலகம் ஒன்றில் பதிவு செய்யப்படுவதற்குப் பத்திரம் கொடுக்கப்படும்போது மூலப்பத்திரத்துடன் அப்பத்திரத்தின் நகல் ஒன்றும் சேர்த்துக் கொடுக்கப்படவேண்டும். பதிவுப் புத்தகத்தில் பத்திரத்தை முழுதும் எடுத்து எழுதுவதற்குப் பதிலாக, அவர் சேர்த்துக் கொடுக்கும் பத்திர நகல், இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கோப்புப் புத்தகங்களில் சேர்க்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதனல் பாதிக்கப்பட்ட அந்த ஊழியர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதற்கான உத்தரவாதம் உண்டா? 10 ஏ (1) என்றவிதியின்கீழ் வேலை செய்தவர்களாக இருந்தாலும், சாதாரணத் தொழிலாளர்களையெல்லாம் ஆறு மாதம், ஒரு வருஷம் ஆனல் பர்மனென்ட் செய்யவேண்டுமென்று சொல்லும்போது, அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கி தகுதியான வேலைவாய்ப்பு கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிலாளர்களுடைய பிரச்சினைக்கும், 10 ஏ (1) அப்பாயின்ட்மெண்டுக்கும் சம்பந்தம் இல்லை. இந்தத் துறையிலே புதிய முறை புகுத்தப்பட்ட காரணத்தால் இரண்டு வகையான அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நிரந்தரமாக இருக்கிறவர்கள் அத்தனைபேரும் அரசாங்கத்தின் வேறு துறைகளிலே எங்கெங்கு வேலை இருக்கிறதோ அவைகளுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். அதுபோல் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். இன்னொரு முறை. ஒவ்வொரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலும் எப்போது வேலை இருக்கிறதோ அப்போது சில பேர் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் தொழிலாளர்களைப் போல் தொடர்ந்து வேலை செய்கிறவர்கள் அல்ல. ஒரு மாதம், இரண்டு மாதம் என்று அப்போதைக்கப்போது வேலை இருக்கும்போது மட்டும் வேலை செய்கிறவர்கள். அவர்களுக்கும் எந்த வகையில் வேலை கொடுக்கலாம் என்று அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து வருகிறது.